செ.கு.எண்: 99 நாள்: 10/8/2011

# மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்களின் இரங்கல் செய்தி – 10.8.2011

---

தமிழ்நாட்டின் முன்னாள் ஆளுநர் டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள் தனது 90–வது வயதில் இன்று இயற்கை எய்தினார் என்ற செய்தியறிந்து நான் மிகுந்த துயரம் அடைந்தேன்.

டாக்டர் பி.சி. அலெக்சாண்டர் அவர்கள், 1948 ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப் பணி அதிகாரியாக தனது பணியைத் துவக்கி, பல்வேறு உயர் பதவிகளை வகித்து, பின்னர் பொது வாழ்விலும் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர் ஆவார். மத்திய அரசின் செயலாளராகவும், முன்னாள் பாரதப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி அவர்களின் முதன்மைச் செயலாளராகவும், இங்கிலாந்து நாட்டிற்கான இந்தியத் தூதுவராகவும், தமிழ்நாடு மற்றும் மகாராஷ்டிரா மாநிலங்களின் ஆளுநராகவும், மாநிலங்களவை உறுப்பினராகவும் சிறப்புற பணியாற்றியவர். அவர் தமிழ்நாட்டின் ஆளுநராகப் பணியாற்றிய போது, இங்கே குடியரசுத் தலைவர் ஆட்சி ஏற்படுத்தப்பட்டு, திறம்பட நிர்வாகத்தை நடத்தியவர் ஆவார். இவர் பல்வேறு புத்தகங்களையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார். டாக்டர் அலெக்சாண்டர் அவர்களின் மறைவால் ஒரு தலை சிறந்த நிர்வாகியை நாடு இழந்து விட்டது.

டாக்டர் அலெக்சாண்டர் அவர்களை இழந்து வாடும் அவரது குடும்பத்தினருக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு, அன்னாரது ஆன்மா இறைவன் திருவடி நிழலில் இளைப்பாற எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கிறேன்.

**ஜெ ஜெயலலிதா**
தமிழ்நாடு முதலமைச்சர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9